Ti Nb
Ir Ta
Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.

Tiaano® Innovation In Inert Metals 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Jan. 16 : 924 Nos.
  - Up to Dec. 15 : 917 Nos.
- **Performance Jan. 16 …**
  - Turnover growth : 8.61%
  - Employment growth : -1.70%
  - 100% Attendance : 7.34 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Curriculam)

### ACHIEVEMENT CHART




## நட்பு

ஒரு பெரிய மருத்துவமனை…அவற்றில் ஒரு அறையில் இரு தீவிர நோயாளிகள். ஒருவரை இன்னொருவர் பார்த்தது இல்லை. இருவருக்குமிடையே ஒரு தடுப்புச் சுவர். ஒருவரின் படுக்கை சன்னல் அருகில். இன்னொருவருக்கு சன்னல் கிடையாது. எப்போதாவது வந்து செல்லும் மருத்துவச் செவிலியைத் தவிர தனிமை..தனிமை..தனிமை..!

சன்னல் படுக்கை நோயாளிக்கு புற்றுநோய். இன்னொருவர் கடும் எலும்பு முறிவு நோயாளி. நாளடைவில் இருவரும் நட்பாகிவிட்டனர். ஒருமுறை, எலும்பு முறிவு நோயாளி சன்னல் ஓர நோயாளியிடம் சொன்னார். உனக்காவது பொழுது போக்காக, ஒரு சன்னல் இருக்கிறது. எனக்கு அதுகூட இல்லை. கவலைப்படாதே நண்பா…நான் சன்னலூடே என்னென்ன காண்கிறேனோ, அவ்வளவையும் உன்னிடம் விவரிக்கிறேன். இதை ஒரு ஒப்பந்தமாகவே கடைப்பிடிப்பேன்…!

அன்று முதல் சன்னல் நோயாளி, தான் கண்ட காட்சிகளைச் சுவைபட தன் நண்பனுக்குக் கூறலானார். நண்பா…சன்னலுக்கு வெளியே ஒரு பெரிய ஏரி, நடுவில் சிறு தீவு, ஏரிக்கரையில் அழகான பூங்கா, காதலர்கள் தன்னை மறந்து கதைகள் பேசுகின்றனர். எலும்பு நோயாளிக்கு அப்படியே காட்சிகள் மனக்கண்ணில் விரியும். சன்னல் நோயாளி இன்னொரு நாள் சொல்வார்…

ஏரிக்கரை ஓரமாக ஒரு சாலை, அதில் மணப்பெண் அழைப்பு ஊர்வலம் போய்க்கொண்டிருக்கிறது. குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஓடித்திரிகின்றன. மணப்பெண்ணிடம் தோழி ஏதோ சொல்கிறாள். மணப்பெண் முகத்தில் அப்படி ஒரு வெட்கம். ஊர்வல அரவங்கள் எதுவும் எலும்பு நோயாளிக்கு கேட்கவில்லையாயினும் நாதசுரமும், தவிலும் ஒலிக்க ஊர்வலம் போகும் காட்சியை நன்கு அனுபவிப்பார்.

ஒருநாள் சன்னல் நோயாளி செத்துப் போனார். மீண்டும் எலும்பு நோயாளிக்கு வெறுமை, தனிமை. ஒருநாள் செவிலி வந்தபோது, தன் படுக்கையை சன்னல் ஓரமாக மாற்றித்தரும்படி கேட்டுக்கொள்ள, அவ்வாறே செய்யப்பட்டது. இனி எனக்கு நன்கு பொழுது போகும் என்று எண்ணியவாறே, தன் எலும்பு முறிவு வலியையும் பொருட்படுத்தாமல் மெல்ல தன் உடலை உயர்த்தி சன்னல் வழியே நோக்க…அங்கே பெரிய சுவர்…! வேறு எதுவும் இல்லை…!

அப்படியானால் சன்னல் நோயாளி சொன்ன கதைகள்? மறுநாள் செவிலி வந்தவுடன், நடந்தவற்றை எலும்பு நோயாளி கூறினார். செவிலி, எலும்பு நோயாளிக்கு ஊசி மூலம் மருந்தை ஏற்றியபடியே சொன்னாள். நீங்கள் பார்க்கும் சுவர்கூட அவருக்கு தெரிந்திருக்காது. புற்றுநோயின் தாக்கத்தால் அவர் பார்வையை எப்போதோ இழந்துவிட்டிருந்தார் என்று…

அன்பு நண்பர்களே…

தன் துன்பங்களை மறைத்துக்கொண்டு தன் நண்பனை சந்தோசமாக வைத்திருப்பவனே நல்ல நண்பன்.

நட்புடன் உங்கள் நண்பன்…
*C. Abilash*
*Marketing*

## FUNCTIONAL WISHES



Mahashivarathri
07th March

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. N. DHASARATHAN** — **03rd Mar.**
Administration



**Mr. E. SEKAR** — **03rd Mar.**
Production

**Mr. K. RAMESH** — **15th Mar.**
Coating

**Mr. S. SIVASUBRAMANIAN** — **15th Mar.**
Marketing

**Mrs. M. BHAVANI** — **17th Mar.**
Administration

**Mr. C. VIJAYA KUMAR** — **18th Mar.**
Fibtec

**Mr. S. MATHI KRISHNAN** — **20th Mar.**
Marketing

**Mrs. E. KALA** — **22nd Mar.**
Administration

**Mr. A. SABAPATHY** — **24th Mar.**
Fibtec

**Mr. S. AROKYA RAJ** — **27th Mar.**
Production

**Mr. S. SANTHA KUMAR** — **30th Mar.**
Production

**Best Wishes from Tiaano Employees**

## சூடாகும் பூவுலகு

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் புவி வெப்பம், பருவநிலை மாற்றங்கள் ஒவ்வொரு நாட்டையும் புரட்டி போட தொடங்கிவிட்டன. வங்கதேசம் போன்ற நாடுகளில் பருவநிலை மாற்றங்களால் மக்கள் வாழ வழியின்றி அகதிகளாக இடம் பெயர்ந்து கொண்டு இருக்கின்றனர். ஆண்டுக்காண்டு மழை, வெயில், காற்று என எல்லாமே அளவுக்கு மீறி வருகிறது. அதிகரித்து வரும் பருவ நிலை பாதிப்புகளை கட்டுப்படுத்தி, புவி வெப்பத்தை குறைக்காவிட்டால் அதிக வறட்சி காரணமாக 2050 – ம் ஆண்டில் சுமார் 20 லட்சம் பேர் அருந்த தண்ணீர் இன்றி செத்து மடிவார்கள் என 600 – க்கு மேற்பட்ட விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு கடுமையாக எச்சரித்துள்ளது.

புவி வெப்பம் ஏற்பட காரணமே பசுமை இல்ல வாயுக்கள் என்றழைக்கபடுகிற கரியமில வாயு, மீதேன் போன்ற வாயுக்கள் அதிக அளவில் வளி மண்டலத்தில் பரவிவிட்டது தான். கடந்த 1973 – ம் ஆண்டுக்கு பிறகு உலகெங்கிலும் தொழிற்சாலைகளும் வாகனங்களும் அதிகரித்ததன் விளைவாக பசுமை இல்ல வாயுக்களும் அதிகரித்தன. இதன் விளைவாக பூமியின் வெப்பநிலை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது.

உலகிலேயே மிக உயரமான மலை என்ற புகழுக்குரிய இமயமலைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இமயமலைப்பகுதியில் மூன்று இடங்களில் விஞ்ஞானிகள் நீண்ட துளை போட்டு ஆய்வு செய்ததில் அந்த பனிபாறைகளில் வாயு சேர்வதாகவும் கோடை காலத்தில் அந்த பனி பாறைகள் வேகமாக உருகி வருவதாகவும் கண்டு அறிவித்து உள்ளனர். துருவப்பகுதிகளான ஆர்டிக், அன்டார்டிக் பனி பகுதிகள் ஏற்கனவே உருக தொடங்கிவிட்டன. கரியமிலவாயு அதிகமாக வெளியேறுவதற்கு முக்கிய காரணம் அனல்மின் நிலையங்களும், பெட்ரோல், டீசல் போன்றவற்றின் பயன்பாடும்தான்.

பூமி வெப்பமடைதலை குறைக்க மரபுசாரா ஆற்றல் மூலம் மின்சாரம் தயாரிக்க வேண்டும். பெட்ரோல், டீசல் பயன்பாடுகளை குறைக்க வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் கூறியுள்ளனர். காற்று, சூரிய ஆற்றல் போன்ற இயற்கை பொருட்களை கொண்டு ஆற்றலை அதிக அளவில் தயார் செய்து மக்களின் ஆற்றல் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் இந்தியா உலகத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

## Positive Thinking

One of the most important and valuable laws of successful living is the power of positive thinking. Positive thinking means having the right perception of life. Human beings can alter their lives by alternating their attitudes of mind. It is necessary to have the right perception in the five main categories.

1. Self
2. Other people
3. Life
4. World
5. God

## தெரிந்து கொள்வோம்

### இதயத்தை இதமாக்கும் விஷயங்களை நினைத்தாலே இனிக்கும்

- பிடித்த ஒருவரைப் பார்க்கும் போதோ அல்லது அவர்களுடன் இருக்கும் போதோ அவர்களுடனான மகிழ்ச்சியான தருணங்களை ஆசையோடு அசைபோட ஆரம்பித்துவிடும் நம் மனது.
- இதனால் மூளையிலிருந்து டோமைன் அதிகமாகச் சுரக்கும்.
- இந்த டோமைன் கூட மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடிய ஒரு ரசாயனம் தான்.
- மகிழ்ச்சியான தருணங்களில் இது அதிகமாகச் சுரப்பதால் இதயத்தின் செயல்பாடு அதிகமாகி ரத்த அழுத்தம் இயல்பாகும்.
- எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்து பாசிட்டிவ்வாகப் பேசுவது பேசுபவர்களுக்கும் நல்லது. பாசிட்டிவ் எண்ணங்கள் கவலை, பயத்தை மட்டும் அல்ல, உயர் அழுத்தம் போன்ற பல நோய்களையும் விரட்டுகின்றன.
- மனதுக்கு வருத்தத்தைத் தரக்கூடிய சில தவறான முடிவுகளும் எண்ணங்களும் தான் இதயநோய்க்கு முக்கிய காரணம். பாசிட்டிவாக யோசிப்போம். இதயப் பிரச்சனைகளுக்கு குட்பை சொல்வோம்.
- பிடித்தவர்களிடம் உள்ள ஐந்து நல்ல விஷயங்களைத் தினமும் பட்டியல் இடுங்கள். அன்பு அதிகமாவதோடு ஆரோக்கியமும் அதிகரிக்கும்.

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

### Amazing facts about our Solar System

- Light from the sun takes 8 minutes to reach us, thus we see the sun as it was 8 minutes ago. It might have blown up 4 minutes ago and we wouldn't know about it.
- Some rocks found on earth are actually pieces of mars.
- Saturn is the lightest of all planets. It is the less dense than water and would actually float if put in water.

People are defeated in life not because of lack of ability, but lack of whole heartedness. Positive thinking transforms us from cowards to heroes, from soft and tender minded to tough minded individuals, from weak and negative mind to men of positive strength. The positive attitude is the most powerful and priceless characteristic, one can possess. This power within you can change anything in your life.

### இந்திய நாணயங்கள் எங்கே தயாரிக்கப்படுகின்றன என்பது தெரியுமா?

இந்திய ரூபாய் நோட்டுகள் நாசிக் நகரத்தில் அச்சிடப்படுகிறது என்பது தெரியும். இந்திய நாணயங்கள் எங்கே தயாரிக்கப்படுகின்றன என்பது தெரியுமா?

டெல்லி, மும்பாய், கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் தயாரிக்கப்படுகின்றன. எந்தக் காசு எந்த நகரத்தில் தயாரிக்கப்பட்டது என்பதற்கும் ஒரு குறி இடப்படுகிறது. நாணயங்களின் அடியில் தயாரிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டிருக்கும். அதனைப் பார்த்திருப்பீர்கள். அத்துடன் ஒரு குறியும் இடம் பெற்றிருக்கும். அந்தக் குறியை வைத்து அந்த நாணயம் எந்த ஊரில் தயாரிக்கப்பட்டது என்பதை அறியமுடியும். நாணயத்தின் உள்ள ஆண்டுக்குக் கீழே ஒரு புள்ளி இருந்தால் அது டெல்லியிலும், டைமண்ட் வடிவம் இருந்தால் அது மும்பாயிலும், நட்சத்திர வடிவம் இருந்தால் அது ஹைதராபாத்திலும், எந்தக் குறியீடும் இல்லாமல் இருந்தால் அது கொல்கத்தாவிலும் தயாரிக்கப்பட்டது ஆகும்.

*Compiled By : Mrs. R. Gayathiri*
*Receptionist*

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி L)

#### இரண்டடி உலகம்

அந்தப் பலகையில், எந்தப் பெயரும் தகட்டில் எழுதி, ஸ்க்ரு ஆணி கொண்டு பொருத்தப்படவில்லை. யாரேனும் புதிதாக வந்தால், ஒரு காகிதத்தில் எழுதி உரிய இடத்தில் செருகிறார்கள். அவர் கிளம்பிவிட்டால், அந்தப் பெயரை நீக்கிவிடுகிறார்கள். அவ்வளவுதான்.

ஒரு லாட்ஜில், பலரும் வந்து தங்குவார்கள், கிளம்பிச் செல்வார்கள். அவர்களுடைய பெயர்களையெல்லாம் நிரந்தரமாக எழுதிப் பொருத்திக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, அடிக்கடி சுலபமாக மாற்றமுடிகிற வகையில் அந்த அறிவிப்புகள் எழுதப்படுகின்றன.

இதேபோல், நமது சேமிப்புக் கிடங்கில் எழுதுகிற தகவல்களையும், எப்போதெல்லாம் மாற்ற வேண்டிருக்கும் என்பதையும் யோசித்து, அதற்கேற்ற அறிவிப்பு முறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சேமிப்புக் கிடங்குகள் அல்லது அலமாரிகளில்மட்டுமின்றி, கருவிகளிலும் இதுபோன்ற தகவல் அறிவிப்புகள் அவசியப்படலாம். உதாரணமாக — ஓர் அலமாரியின்மீது 'ஸ்பேனர்கள்' என்று எழுதி ஒட்டிவிட்டால் போதுமா?. உள்ளே குவிந்து கிடக்கும் ஸ்பேனர்களில் எனக்குத்தேவைப்படும் ஸ்பேனர் எங்கே என்று தேடுவதற்கு ஏதேனும் ஓர் உதவி வேண்டாமா?.

## கவிதைகள்

### Nature Is Everywhere

Nature is everywhere.
Nature is everywhere you go.
Everything that lives and grows is nature.
Animals big and small.
Nature is plants that grow so tall.
Nature is beautiful in every way.
Wonderful, exciting and needs our care.
So listen, learn and do your part to keep nature
Beautiful forever.

### My Mother

I love so much my mother,
She's always in my heart.
Even though we argue,
We'll never be apart.

She can tell when I have problems.
She knows when I am down.
She's always there to cheer me up,
and take away my frowns.

At times when I get mad at her
it's hard to stay that way.
Only because she makes me laugh
every passing day.

I love my mother with all my heart,
but this she does not know.
Sometimes I want to tell her,
but I'm afraid to let it show.

*Compiled By : Ms. T. Regi*
*Facilitation*

## சிந்தனைக்கு

ஒருவன் தன்னை வெறுக்கத் தொடங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்...நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுதான் நமது முதற்கடமை.

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இதற்காகத்தான், கருவிகள் அல்லது பொருள்களின்மீது தகவல்கள் எழுதிவைக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஸ்பேனரின் முதுகிலும், அதன் எண், எங்கே எதற்காகப் பயன்படுகிறது என்பது போன்ற விவரங்களை எழுதிவைக்கலாம்.

சூப்பர் மார்க்கெட்களில், ஒவ்வொரு பொருளின் முதுகிலும் அதுபற்றிய முழு விவரங்களைக் குறித்து வைத்திருப்பார்கள். இதனால், நாம் தேடுகிற பொருளின் பெயர், அளவு, விலை என்று எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சரியான பொருள்களைத் தேர்ந்தெடுக்கமுடியும். அவர்களுக்கும், பில் போடுவது வேகமாகும்.

வீடுகளில்கூட, சமையல் எரிவாயு சிலிண்டர்களில் பயன்படுத்தத் தொடங்கிய தேதியைக் குறித்துவைக்கிறோமே. அதேபோல், ஒவ்வொரு பொட்டலத்தைப் பிரித்து டப்பாவில் நிரப்பும்போதும், அதன்மீது சில தகவல்களை எழுதிவைப்பது நல்லது, முக்கியமாக பொருளின் பெயர், அளவு, எத்தனை நாள்களுக்குள் இதைப் பயன்படுத்த வேண்டும் (Expiry Date) போன்ற விவரங்கள்.

ஒரு வழியாகப் பொருள்களை வகை பிரித்து, எங்கே எப்படிச் சேமிப்பது என்பதை முடிவு செய்துவிட்டோம். இந்த விவரங்களைத் தெளிவாக எழுதி ஒட்டிவிட்டோம். அடுத்து நாம் கவனிக்கவேண்டியது, பாதுகாப்புப் பிரச்னைகளை!

**ஜாக்கிரதை**

‘ஆர்ச்சீஸ்’ என்ற பெயரில் வெளியாகும் காமிக்ஸ் புத்தகங்கள் உலகப் புகழ் பெற்றவை. அதில் இடம்பெறும் டீனேஜ் மாணவ, மாணவிகளின் உற்சாகமான விளையாட்டுகளும் கும்மாளங்களும் அனுபவங்களும் எல்லா வயதினரையும் கவரக்கூடியவை.

ஆனால், வெறும் பொழுதுபோக்குப் புத்தகங்களாகவே மதிக்கப்படும் ஆர்ச்சீஸ் வரிசையில், அவ்வப்போது சில சுவாரசியமான வாழ்க்கைப் பாடங்களும்கூட கிடைப்பதுண்டு. அப்படித் தென்பட்ட ஒரு கதை இது. இந்தக் கதையின் நாயகனான ஆர்ச்சி எதைச் செய்தாலும் நிச்சயமாகச் சொதப்பி விடுவான் என்பது அவனுடைய ஆசிரியர்களின் நம்பிக்கை.

தொடரும்...

### Anodes and Cathodes for Water Electrodeionization

